24—

LOANS TO TEACHERS OF PRIVATE AIDED COLLEGES FOR HOUSING AND PURCHASE OF VEHICLES

*9610—Dr. **Beatrix D' Souza** :
Will the Honourable the Minister for Education be pleased to state-

Whether the Government will extend to Teachers of Private Aided Colleges, loans for housing and purchase of Vehicles ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வீடு கட்ட மற்றும் ஊர்தி வாங்க கடன் ஆகிய சலுகைகளை உதவிபெறும் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் நீட்டிப்பதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

Dr. Beatrix D' Souza : Honourable Speaker Sir, college teacher in private aided colleges are paid directly by the Government. They also have the same service conditions as Government college teachers; for example, they cannot contest election. At present, they take loans at high rates of interest from private banks. I understand the Honourable Minister for Education has assured the private college teachers that they would get loans for housing and vehicles. Those college teachers are only 6000 in number. If the U.G.C. is prepared to give a grant for housing, will the Government give a matching grant ?

Honourable Dr. C. Aranganayagam : Mr. Speaker Sir, the Government will extend possible concessions to college teachers also.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 25, டாக்டர் எம். பி. சேகர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

25—

பெரம்பூரில் மருத்துவமனை கட்டும் திட்டம்.

*9843— டாக்டர் எம். பி. சேகர் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூரில் ஒரு மருத்துவமனை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

1993 பிப்ரவரி 9]

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பெரம்பூரில் மருத்துவமனை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் எம். பி. சேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, முடியாது என்கிற சொற்களே தன் அகராதியில் இல்லை என்று நிரூபித்துக் காட்டிய நமது மாண்புமிகு முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொன்னான, பொற்கால திறமையான ஆட்சியிலே, இல்லை என்று நமது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதை மறுபரிசீலனை செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லையென்று சொல்ல வேண்டியதற்கு கட்டாயமாக இல்லையென்றுதான் சொல்லியாக வேண்டும். இதிலே பக்கத்தில் ஒரு மருத்துவமனை பெரியார் நகரில் 100 படுக்கைகளுடன் இருக்கிற காரணத்தால்தான் இல்லையென்று சொல்லி இருக்கிறோம். நாளைய தினம் யாராவது வீதிக்கு ஒரு மருத்துவமனை என்று சொன்னால் எப்படி உண்டு என்று சொல்ல முடியும்? எனவே, அருகாமையில் இருக்கிறது. இப்போது அரசாங்கம் எடுத்திருக்கிற முயற்சியெல்லாம் ஏற்கனவே இருக்கிற மருத்துவமனைகளுக்கு நல்ல வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதற்காக முயற்சிகளை படிப்படியாக நாங்கள் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். எனவே, புதியதாக ஒரு மருத்துவமனை அங்கே அவசியம் இல்லையென்ற காரணத்தால் தான் இல்லையென்று சொல்கிறோம். பக்கத்தில் இருக்கிற அந்த மருத்துவமனையைப் பயன்படுத்தலாம். கே.எம்.சி. மருத்துவமனை பக்கத்தில் அதற்கு அருகாமையில் இருக்கிறது. எனவே, இங்கே மருத்துவமனை வராது என்று சொன்னேன். எனவே, மறுபரிசீலனை இப்போதைக்குச் செய்ய முடியாது.

டாக்டர் எம். பி. சேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதி தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதி. தாழ்த்தப்பட்ட மக்களில் மிகவும் தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ள பகுதி. தொழிற்சாலைகள் நிறைய உள்ள பகுதி. பெரியார் நகர் ஆஸ்பத்திரி இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த பெரியார் நகர் என்பது புரசை தொகுதி யிலும் இருக்கிறது, பெரம்பூர் தொகுதியிலும் இருக்கிறது. பெரம்பூர் தொகுதிக்குச் வர வேண்டிய இந்த பெரியார் நகர் ஆஸ்பத்திரி புரசை தொகுதிக்குச் சென்று விட்டது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து பெரம் பூர் தொகுதிக்கும் ஒரு மருத்துவமனை கட்டித்தர முன்வருவாரா என்று பணிவன்போடு கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் நகர் மருத்துவமனை ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டு விட்டது. இனிமேல் அதை இந்தத் தொகுதிக்கு கொண்டு வருவது என்பது முடியாத காரியம். எனவே, தொகுதிக்கு ஒரு மருத்துவமனை கட்டுவது நோக்கம் அல்ல. சென்னையில் பரவலாக எந்தெந்த இடத்தில் மருத்துவ மனை தேவை என்பதை அறிந்து, இருக்கிற ஜனத்தொகையை மொத்தமாக கணக்கிட்டுத் தான் செய்ய முடியுமேயொழிய ஒரு தொகுதிக்கு என்று கணக்கிட்டுச் செய்ய முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பொறுத்தவரையில் அவருடைய தொகுதியில் ஒரு மருத்துவமனை வேண்டுமென்று கேட்டிருக் கிறார்கள். அதைச் செய்வதற்கு இயலாது. மற்றபடி இருக்கிற மருத்துவமனைகளில் என்னென்ன முன்னேற்றம் வேண்டுமென்று அவர்கள் தெரிவிக்கிறார்களோ அதற்கான நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 26, திரு. ஏ. தா. பொன்னுவேலு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

26—

பெரம்பலூரிலிருந்து அரியலூர் வரை புறநகர் பேருந்து விடுதல்

*9780—திரு. ஏ. தா. பொன்னுவேலு :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூரிலிருந்து ஆலத்தூர் கேட், கொளக்கா நத்தம் வழியாக அரியலூர் வரை புறநகர் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா ?